1978 மார்ச் 8]

சொல்லிக் கொடுக்கிற சூழ்நிலைகள் ஏற்பட்டு அதனால் அந்த மாணவர்கள் பயன்படாத நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இருக்கிற நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊனம் உற்றோர் மறுவாழ்வுத் திட்டம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கால் ஊனம் உற்றவர்களுக்கு மூன்று கால் சக்கர வண்டிகள் கொடுத்தார்களே, அப்படி எவ்வளவு வண்டிகள் கொடுக்கப்பட்டன. கிராமங்களிலும், நகரங்களிலும் கால், கை ஊனம் உற்றவர்கள் லட்சக்கணக்காக இருக்கிறார்கள். பதிவு செய்துள்ள 9,000 பேர்களில் இப்போது 2,000 பேர்களுக்குத்தான் வேலை அளிப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே உடல் ஊனம் உற்று 10 வருடம் படித்து விட்டு, பெண்களும் ஆண்களும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு காலத்திற்குள்ளாக பூரா பேருக்கும் வேலை கொடுக்க அரசு முன் வரும் என்று கேட்க விரும்புகிறேன். அத்தோடு இந்த உடல் ஊனம் உற்றோர்களுக்கு கிராமத்தில் அவர்களுக்குப் பயன்படும் விதத்தில் சிறுதொழில் வைத்து அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த அருமையான யோசனையை சர்க்கார் கவனத்தில் ஏற்றுக் கொள்கிறது.

சென்னைக்கு குடிநீர் வழங்கல்.

* வினா 452—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது செயல்பட்டுவரும் சென்னை குடிநீர்த் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைப் பற்றி ஐ.நா. நிபுணர்கள் அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் குறைபாடுகள் யாவை ?

(இ) அவைகளை நிவர்த்திக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) (1) பூண்டி மற்றும் புழலேரி ஆகிய நீர்த்தேக்கங்களில் தற்போது 60 சதவீதத்திற்கு மேல் தண்ணீர் ஆவியாவதன் மூலமும், கசிவுகள் மூலமும் வீணாகின்றது.

(2) நீர்ப்பங்கீடு அமைப்பில் குழாய்களும் மற்றும் வால்வுகளும் சரியாக பராமரிக்கப்படாமல் மிகவும் சீர்குலைந்த நிலையில் இருப்பதால், மிகுந்த அளவு நீர் கசிவினால் வீணாகிறது.

(3) வீட்டுக்குழாய் அமைப்புகளில் பழுதடைந்த குழாய்கள் மற்றும் வால்வுகள் இருப்பதாலும், அளவுடன் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான மீட்டர்கள் மிகக் குறைந்த அளவிலே பொருத்தப்பட்டிருப்பதாலும், பொறுத்தப்பட்ட மீட்டர்கள் சரிவர இயங்காததாலும் மிகுந்த தண்ணீர் வீணாகிறது.

(இ) மேலே கூறிய குறைபாடுகளை நீக்க உலக வங்கியின் உதவியுடன் உடனடி சீரமைப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு எண்ணியுள்ளது. இத் திட்டத்தின்படி குழாய்கள் மற்றும் கட்டுப்பாடு வால்வுகளைச் சீரமைத்தும் புதுப்பித்தும், தற்போதுள்ள மீட்டர்களைத் திருத்தியும், புதிய மீட்டர்களைப் பொருத்தியும் தண்ணீர் வீணாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பூண்டி, புழலேரி நீர்த்தேக்கங்களில் தண்ணீர் ஆவியாகி வீணாவதைத் தடுக்க நிலத்தடியில் நீரைத் தேக்கும் யோசனை குறித்து விரிவான பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் வாயிலாக விரைவாகவும் செம்மையாகவும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் குடிநீர் புழலேரியிலிருந்து வருவதால் அந்தப் புழலேரியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைப்பது இல்லை. இந்த அரசு, குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்க வழி காணுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியிலிருந்து சென்னை தனி வாரியமாகப் பிரிக்கப்படும். குடிநீர் வடிகால் திட்டத்திற்கு, உலக வங்கியிலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்? அந்தத் திட்டத்திற்கான முழுச் செலவும் ஏற்கிறார்களா? அல்லது குறிப்பிட்ட சத விகிதம் மட்டும் தருகிறார்களா? தனி போர்டாக நியமிக்க மொத்த செலவீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 8]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆவியாவதைத் தடுப்பதற்கு நிலத்தின் அடியில் நீரைத் தேக்குகிற திட்டம் இருக்கிறது என்று சொல்கிருர்கள். புழலேரியில் உள்ள அவ்வளவு நீரையும் தேக்கப் போகிருர்களா? இதை எப்படிச் செயல்படுத்தப் போகிருர்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொன்னுல் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகாவானந்தம் : நிபுணர்கள் பரிந்துரை வழங்கியிருக்கிருர்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வீராணம் திட்டம் ஒன்று இருந்தது. அதற்காகத் தயாரிக்கப்பட்ட குழாய்கள் வரிசை வரிசையாக வடலூரில் இருந்து ரோடுகளில் கிடப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது, கைவிடப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி அதைப்பற்றித்தான் வருகிறது.

[முற்பகல் 9.50]

திரு. மு. அரங்கநாதன் ; தலைவரர்களே, சென்னை நகருக்கு குடிநீர் தொடர்புகள் கொடுப்பதற்காக உலக வங்கியில் இருந்து கடன் கொடுப்பதாகச் சொன்னுர்கள். இப்போது சென்னை நகருக்கு எவ்வளவு குடிநீர் தொடர்புகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இது உள்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

* Q. 453 Thiru K. KANDASAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) When the Veeranam project is expected to be completed ?

(b) the expenditure incurred on the scheme till 30-6-1977 ; and

(c) the additional amount expected to complete the scheme ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) வீராணம் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது குறித்த பிரச்சினைகள் யாவும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) ரூபாய் 22·64 கோடி.